**கவனிக்க.-** *2010.10.21 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1678 - 2010 ඔක්තෝබර් මස 29 වැනි සිකුරාදා - 2010.10.29**

*1678 ஆம் இலக்கம் – 2010 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*

| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1638 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1645 |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2010, நவெம்பர் மாதம் 04 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத்தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்;ராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்;ராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந்திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந்திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந்திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும் .

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந்தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி – கண்டி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள முஸ்லிம் விவாக பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண் பாலாருக்கு விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2010, கார்த்திகை மாதம் 29 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2010, ஐப்பசி 12.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | தும்பனே | தும்பனே பிரிவின் கலகெதர மடிகே பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், கண்டி |
| கண்டி | தும்பனே | தும்பனே பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், கண்டி |

10-947

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி - கண்டி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக பெண், ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2010, கார்த்திகை 29 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2010, ஐப்பசி 12.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | தும்பனே | தும்பனே கன்அட்ட பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் தும்பனே பிரிவில் விவாகப் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், கண்டி |

10-948

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - அம்பாறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள முஸ்லிம் விவாக பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண் பாலாருக்கு விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2010, கார்த்திகை மாதம் 29 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2010, ஐப்பசி 6.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அம்பாறை | கல்முனை | கரவாகுபற்று (மருதமுனை-02) பிரிவில் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், அம்பாறை |

10-949

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி (தமிழ் மொழி மூலம்) - பதுளை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள தமிழ் மொழி மூல விவாக, பிறப்பு, இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக பெண், ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2010, கார்த்திகை 10 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2010, ஐப்பசி 6.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| பதுளை | ஹப்புத்தளை | ஹப்புத்தளைகம பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் ஹப்புத்தளை பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், பதுளை |
| பதுளை | பதுளை | பதுளை நகரப் பிரிவில் பிறப்பு, இறப்பு, வைத்தியப் பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், பதுளை |

10-950

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி (தமிழ் மொழி மூலம்) - அம்பாறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள தமிழ் மொழி மூல விவாக, பிறப்பு, இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2010, கார்த்திகை 29 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2010, ஐப்பசி 6.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அம்பாறை | நாவிதன்வெளி | நாவிதன்வெளி பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் சம்மாந்துறை பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், அம்பாறை |

10-951

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி - நுவரெலியா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக பெண், ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2010, கார்த்திகை 26 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2010, ஐப்பசி 6.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலாளர் பிரிவு* | *விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| நுவரெலியா | நுவரெலியா | பல்லேபனே பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் கொத்மலை பிரிவில் விவாகம் (பொது) பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், நுவரெலியா. |
| நுவரெலியா | கொத்மலை | மெதபனே பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் கொத்மலை பிரிவில் விவாகம் (பொது) பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், நுவரெலியா. |

*10-975*

---

## இலங்கை பரீட்சைத் திணைக்களம்

*அச்சக அத்தியட்சகர் பதவிக்கு ஆட்சேர்த்தல்*

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் அச்சகத்தில் அச்சக அத்தியட்சகர் பதவிக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் அச்சக சேவை ஒழுங்குவிதிக்கமைய தகைமைகளையுடைய ஆண் விண்ணப்பதாரர்களிடமிருந்து மாத்திரம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*2. **தகைமை**.-* (i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) *2010.09.30* ஆந் திகதியில் விண்ணப்பதாரியின் வயது *18* இற்குக் குறையாமலும் *45* இற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் (தற்போது அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயதெல்லை பொருந்தாது) ;

(iii) சிறந்த நல்லொழுக்கம் உள்ளவராகவும் உடல் நலமுள்ளவ ராகவும் இருத்தல் வேண்டும்.

*3. **கல்வியும் ஏனைய தகைமைகளும்*** :

*(அ)* (i) *அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இரசாயனவியல் அல்லது பௌதிகவியலை ஒரு பாடமாகக் கற்ற பட்டதாரியாகவும் அரசாங்க அல்லது அரசாங்கத்துடன் இணைந்த அச்சகத்தில் அத்தியட்சகர் அல்லது அதற்குச் சமமான பதவியில் மூன்று வருடம் சிறந்த சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்து இருத்தல்*

*அல்லது*

(ii) *அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற பட்டதாரியாகவும் ''லண்டன் ஸ்கூல் ஒப் பிரின்டிங் அன்ட் கிரபிக் ஆட்ஸ் அல்லது மன்செஸ்டர் கொலேஜ் ஒப் ரெக்னொலொஜி அல்லது எடின்பரோவில் ஹரியட் வொட் கொலேஜ்'' ஆகிய அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் அல்லது ஓர் அச்சக தொழில் கல்வி நிலையத்தில் குறைந்தபட்சம் ஒரு வருட முழுநேரப் பாடநெறியை வெற்றிகரமாக கற்றபின்னர் சான்றிதழை அல்லது அச்சுக்கலை பற்றிய டிப்ளோமா சான்றிதழை அல்லது அச்சகக்கலை பற்றிய சான்றிதழைப் பெற்றிருத்தல்*

*அல்லது*

*(ஆ) மேலே* (ii) *ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள ஏதாவதொரு சான்றிதழுடன் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தில் அச்சக நிர்வாகியாக மூன்று (03) வருடம் தொடர்ச்சியாக சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்திருத்தல்*

*அல்லது*

*(இ) இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தில் அச்சக சேவையில்* II *ஆம் வகுப்பில்* II *ஆம் தரத்தில் ஐந்து (5) வருடசேவைக் காலத்தைப் பூர்த்திசெய்து இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் அச்சக சேவையில் 20 வருட அனுபவம் இருத்தல்.*

***மேலதிக தகைமைகள்***.- *''லண்டன் சிட்டி அன்ட் கில்ட்ஸ்'' நிறுவனத்தினால் அல்லது ''பிரிட்டிஸ் பெடரேஸன் ஒப் மாஸ்டர்ஸ் ப்ரின்டர்ஸ்'' இன் டிப்ளோமா சான்றிதழை அல்லது ஓர் தனியார் நிறுவனத்தில் நிறைவேற்று அலுவலகராக அனுபவம் பெற்றிருத்தல்*

*4. **ஆட்சேர்ப்பு முறையும் சேவை நிபந்தனைகளும்**.-* (i) *மேற்குறிப் பிட்டுள்ள தகைமைகளையுடைய விண்ணப்பதாரிகள் எழுத்து/ செய்முறை பரீட்சைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் பொது நிர்வாகச் சுற்றுநிருப இலக்கம் 15/90 இன் ஏற்பாடுகளுக்கு அமைய ஆட்சேர்க்கப் படுவர். (முதலில் திணைக்கள அலுவலர்களிடையே இருந்து)*

(ii) *இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியம் உள்ளதும் ஆகும். விதவைகள், அநாதைகள்/தபுதாரர்கள், ஓய்வூதிய நிதிக்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.*

*5. **சம்பள அளவுத்திட்டம்**.- ரூபா 22,935 – 10 x 635 – 8 x 790 – 17 x 1,050 – ரூபா 53,555.*

7. **விண்ணப்பிக்கும் முறை**. (i) இந்த அறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைய ''ஏ4'' அளவுள்ள தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி, தயாரித்து சரியாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2010.11.12 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு, ''பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை'' என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும்.

(ii) தற்போது அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை நிறுவகத் தலைவர் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

(iii) விண்ணப்பப்படிவம் வைத்து அனுப்பப்படும் கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் பரீட்சைத் திணைக்கள அச்சக அத்தியட்சகர் பதவிக்கு ஆட்சேர்த்தல் என்பதைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

(iv) விண்ணப்பங்கள் அல்லது அது தொடர்பான எந்த ஒரு ஆவணமோ தபாலில் காணாமல் போகும் அல்லது தாமதமடையும் விண்ணப்பங்கள் தொடர்பான எவ்வித முறைப்பாடும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(v) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள், பூரணமற்ற விண்ணப்பங்கள், தகைமைகளைப் பூர்த்திசெய்யாத விண்ணப்பங்கள் ஆகியன எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

(vi) இவ் அறிவித்தலில் உள்ளடக்கப்படாத எவையேனும் விடயங்கள் இருப்பின் அவை பற்றித் தீர்மானிக்கும் அதிகாரம் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்குடையதாகும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை,
இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை பரீட்சைத் திணைக்களம்**

அச்சக அத்தியட்சகர் பதவிக்கு ஆட்சேர்த்தல்

[ ]

(அலுவலகப் பாவனைக்கு மாத்திரம்.)

1. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பேரெழுத்தில்) (முதலெழுத்துக்களை இறுதியில் இடவும்) உ-ம் : PERERA A.B) : -----.

1.2 முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : -----.

1.3 முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் (ஆங்கில பேரெழுத்தில்) :-----.

1.4 முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் (சிங்களத் தில்/ தமிழில்) :-----.

2. 2.1 தனிப்பட்ட முகவரி (ஆங்கில பேரெழுத்தில்) :-----.
2.2 தனிப்பட்ட முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :-----.
2.3 அலுவலக முகவரி :-----.

3. 3.1 பிறந்த திகதி :-

வருடம் [ | | | ] மாதம் [ | ] நாள் [ | ]

3.2 2010.09.30 ஆந் திகதியன்று வயது :-

வருடங்கள் [ | ] மாதங்கள் [ | ] நாட்கள் [ | ]

3.3 விவாக நிலை :-

விவாகமானவர்-1 விவாகமாகாதவர்-2 [ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக.)

3.4 இனம் :-

சிங்களவர்-1, தமிழர்-2, முஸ்லிம்-3, பறங்கியர்-4, ஏனைய-5) [ ]

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக.)

4. கல்வித் தகைமைகள் :-
4.1 க. பொ. த. (சா. த.) ப் பரீட்சை :-----.
சித்தியடைந்த வருடம் :-----.
சுட்டெண் :-----.

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |

4.2 க. பொ. த. (உ. த.) ப் பரீட்சை :-----.
சித்தியடைந்த வருடம் :-----.
சுட்டெண் :-----.

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

4.3 உயர் கல்வித் தகைமைகள் :-----.

5. தொழில்சார் தகைமைகள் :-----.

6. தொழில்சார் அனுபவம் பற்றிய விவரங்கள் :-----.

7. தற்போது வகிக்கும் பதவி பற்றிய விவரங்கள் :-

7.1 பதவி (வகுப்பு/தரம்) :-----.
7.2 பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :-----.
7.3 நிறுவனம் :-----.

7.4 ஓய்வூதிய உரித்துடையதா, இல்லையா ? என்பது :-----.

7.5 தற்போது வழங்கப்படும் வருடாந்த சம்பள அளவுத்திட்டமும் தற்போதைய சம்பள நிலையும் :-----.

8. **விண்ணப்பதாரியின் உறுதியுரை**.- விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவுக்கு எட்டியவரையில் உண்மையானதெனவும் சரியானதெனவும் உறுதியளிக்கிறேன். அத்துடன் நான் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்பட்டு அல்லது பதவியை விட்டு விலகிச் சென்றவராகக் கருதப்பட்ட ஒருவரல்ல என்பதையும் உறுதியளிக்கிறேன். இங்கு தரப்பட்டுள்ள விபரங்களுள் ஏதும் பிழையானதென அல்லது பொய்யானதென, இப்பதவிக்கு தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் தெரியவந்தால் நான் இப்பதவிக்கு தகுதியற்றவனாவேன் என்பதையும், நியமனத்திற்குப் பின்னர் தெரியவந்தால் எவ்வித நட்டஈடுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் நன்கு அறிவேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

**அரசாங்க உத்தியோகத்தராயின் திணைக்களத் தலைவரின் விதப்புரை**

திரு. ........................................ என்பவருடைய விண்ணப்பத்தை முன்வைக்கின்றேன். இத்திணைக்களத்தின் நிறுவனத்தின் நிரந்தர/ தற்காலிக/ அமய ஊழியராகப் பணியாற்றுகின்றார் என்பதையும் இவர் இப்பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் இவரை தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது என்பதையும் அறியத்தருகிறேன்.

-----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
பதவி முத்திரை ---------------.

திகதி :-----.

(மு. கு.- தேவையற்ற சொற்களை வெட்டிவிடுக.)

10-983

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**கல்வி அமைச்சு**

அரசாங்க, அரசாங்க அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின் ஆசிரியர்களை இலங்கை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதித்தல் - 2010/2011 கல்வி ஆண்டு

2010/2011 கல்வியாண்டில் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகளைத் தொடர்வதற்கு இலங்கை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிப்பதற்காக பொது ஆங்கிலம்/ கலை (ஆங்கிலப் பாடத்துடன் கலை) தகைமை (வெளிவாரி) ப் பரீட்சையில் சித்தியடைந்துள்ள அரச மற்றும் அரசாங்க அங்கீகாரம்பெற்ற தனியார் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்-

(i) ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கொண்ட கலைப்பட்டப் பாடநெறி.

(ii) விஞ்ஞானப் பட்டப் பாடநெறி.

2. விண்ணப்பதாரிகள் இதற்காகப் பின்வரும் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும் :-

(i) 2006 ஆம் வருடத்தில் அல்லது அதன் பின்பு நடாத்தப்பட்ட பொது விஞ்ஞான/கலை (ஆங்கிலப் பாடத்துடன்) தகைமை வெளிவாரி பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும். (பரீட்சைப் பெறுபேற்று பிரதியொன்று விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்)

(ii) விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளன்று ஆசிரியராக 5 வருட சேவையைப் பூர்த்தி செய்திருக்க வேண்டியதுடன் நியமனம் நிரந்தரமாக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.

(iii) ஆசிரிய கல்லூரி, கல்விக் கல்லூரி, பல்கலைக்கழகம் என்பவற்றிலோ தேசிய கல்வி நிறுவனத்தின் பாடநெறிகளைத் தொடர்வதற்காக பதிவு செய்யாதவராக இருக்க வேண்டும்.

(iv) இவ்விசேட அனுமதியின்கீழ் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவது பொதுக் கலைத் தகைமை (வெளிவாரி) அல்லது பொது விஞ்ஞானத் தகைமை (வெளிவாரி) பரீட்சையில் பெற்ற மொத்த புள்ளிகள் மற்றும் உரிய பாடங்களுக்கு பெற்ற புள்ளிகளின் அடிப்படையிலாகும். இதற்கு மேலதிகமாக உரிய பல்கலைக்கழகத்தினால் தீர்மானிக்கக்கூடிய வகையில் விஞ்ஞானப் பட்டப் பாடநெறியை தொடர்வதற்கான தகைமை பெறும் விண்ணப்பதாரர்கள் அப்பல்கலைக்கழகத்தினால் வாய்மூலப் பரீட்சைக்கும் உட்பட வேண்டியதுடன் கலைப் பட்டப் பாடநெறியை தொடர்வதற்கான தகைமை பெறும் விண்ணப்பதாரர்கள் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு சபையின் மூலம் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப் படுவார்கள்.

(v) இப்பாடநெறியைத் தொடர்வதற்கு தெரிவு செய்யப்படுவார்களாயின் அவர்களுக்கு கற்கை விடுமுறை வழங்கப்பட வேண்டியபடியால் கற்றை விடுமுறை உரிமை கொண்டவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்க வேண்டும்.

3. சம்பளத்துடனான விடுமுறை பெற்றுக்கொள்வதற்குள்ள உரிமைகள் பற்றி நேர்முகப் பரீட்சையின்போது வினவப்படும்.

4. பட்டம் பெற்றுக்கொண்ட பின்பு பட்டதாரி ஆசிரிய நியமனம் வழங்குவதற்கு இவ்வமைச்சு கட்டுப்படமாட்டாது.

5. அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளில் சேவை செய்யும் ஆசிரியர்களினால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களில் அப்பாடசாலையின் அதிபர்/முகாமையாளர் என்பவரால் உரிய ஆசிரியருக்காக கற்கை விடுமுறை அனுமதிக்க முடியும்/ முடியாது என்பதை விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும்.

6. சகல விண்ணப்பப்பத்திரங்களும் இங்கு கீழே குறிப்பிடப்படுகின்ற மாதிரிப் படிவத்திற்கேற்பத் தயாரித்து இரண்டு பிரதிகளாக கீழ்க் குறிப்பிடப்பட்ட விலாசத்திற்கு 2010.11.16 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும்.

7. விண்ணப்பப்படிவம் இடப்பட்டு அனுப்பப்படும் தபால் உறையின் இடப்பக்க மேல் மூலையில் 2010/2011 'இலங்கைப் பல்கலைக் கழகங்களுக்கு அனுமதி பெறுவதற்கான விண்ணப்பம்' என்று குறிப்பிடப்பட வேண்டும். அரசாங்க ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளரினாலும் அரசாங்க அனுமதிபெற்ற தனியார் பாடசாலைகளின் ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் உரிய அதிபர்/ முகாமையாளர் என்பவர்களாலும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

எம். எம். என். டி. பண்டார,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

மனிதவள அபிவிருத்திக் கிளை,
கல்வி அமைச்சு,
"இசுருபாய", பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கல்வி அமைச்சு**

........................ பாடநெறியைத் தொடர்வதற்காக ...................... பல்கலைக்கழகத்திற்கு அனுமதி கோருதல் - 2010/2011

1. (i) முழுப் பெயர் :-----
   (ii) முதலெழுத்துக்களுடன் பெயர் :-----

2. ஆண்/ பெண் :-----

3. பதவி (வகுப்பு/தரம் மற்றும் சேவை) :-----

4. சொந்த முகவரி :-----

5. அலுவலக முகவரி :-----

6. தொலைபேசி இல. :-----

7. ஈ-மெயில் முகவரி :-----

8. சேவையில் ஈடுபட்டுள்ள-

   (i) பாடசாலை :----- (ii) வலயம் :-----

   (iii) மாகாணம் :----- (iv) மாவட்டம் :-----

9. (i) முதல் நியமனத் திகதி :-----

   (ii) நிரந்தர நியமனம் பெற்ற திகதி :-----

10. ஆசிரியராக பதிவுசெய்யப்பட்டுள்ள எண் :-----

11. (i) பிறப்பு திகதி :-

   ஆண்டு :----- மாதம் :----- திகதி :-----

   (ii) 2010.11.16 ஆந் திகதியன்று வயது :-

   வருடங்கள் :----- மாதங்கள் :----- நாட்கள் :-----

12. தகுதிகாண் பரீட்சையில் சித்தியடைந்த வருடமும்/பாடங்களும்/ (பெறுபேற்றுப் பிரதியொன்றை இணைக்கவும்)

   (i) ஆண்டு :-----

   (ii) பாடங்கள் : 1 :----- 2 :----- 3 :-----

12. தொடர்வதற்குரிய கல்விப் பாடநெறியின் பெயரும் பாடங்களும் :

   (i) பெயர் :-----

   (ii) பாடங்கள் : 1 :----- 2 :----- 3 :-----

13. அனுமதிபெற விரும்பும் பல்கலைக்கழகத்தின் பெயர் :-----

14. தற்போது ஆசிரிய கல்லூரியொன்றில், கல்விக் கல்லூரியொன்றில், பல்கலைக்கழகமொன்றில் அல்லது தேசிய கல்வி நிறுவகத்தில் வேறு பாடநெறியொன்றிற்கு பதிவு செய்யப்பட்டுள்ளீரா? : -----

அவ்வாறாயின், அதன் விபரங்கள் :-----

மேற்படி விபரங்கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் உறுதிமொழிகிறேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----

மேற்கூறப்பட்ட பெயர் கொண்ட ஆசிரியர் ...................................... ஆந் திகதி தொடக்கம் ............................. பாடசாலையில் சேவையாற்றுகின்றாரென்றும் அவர் இப்பாடசாலையிலிருந்து இறுதியாகச் சம்பளம் பெற்றுள்ளாரென்றும் மேற்படி பாடநெறியைத் தொடர அனுமதிக்கப்படலாமென்பதையும் உறுதிப்படுத்துகிறேன். விண்ணப்பதாரிக்குத் தேவைப்படும் சம்பளத்துடனான கற்கை விடுமுறை பெற்றுக் கொள்வதற்காகச் சிபாரிசு செய்கிறேன்/செய்யவில்லை.

(கற்கை விடுமுறை சிபாரிசு செய்யப்படாவிடில் காரணம் காட்டவும்.)

-----
அதிபர்/முகாமையாளரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

முகவரி :-----
திகதி :-----

சிபாரிசு செய்கிறேன்/செய்யவில்லை,

-----,
வலயக் கல்விப் பணிப்பாளரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

முகவரி :-----
திகதி :-----

சிபாரிசு செய்கிறேன்/செய்யவில்லை,

-----,
மாகாணக் கல்விப் பணிப்பாளரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

முகவரி :-----
திகதி :-----

10-1037

**காணி, காணி அபிவிருத்தி அமைச்சு**

நில அளவைத் திணைக்களம்

நிலஅளவைத் திணைக்களத்தில், அளவை உபகரண தொழில்நுட்ப வியலாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக நடத்தப்படும் பகிரங்கப் போட்டிப் பரீட்சைக்கு தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **பதவியின் தன்மை**.- நிலஅளவைத் தொழிற்பாடுகளுடன் தொடர்புடைய உபகரணங்கள், துணைக்கருவிகள் போன்றவற்றைப் பேணிப் பாதுகாத்தல்.

3. (1) **பரீட்சை வினாத்தாள்கள்** :

(அ) வினாத்தாள் I - நுண்ணறிவு

(ஆ) வினாத்தாள் II - பொது அறிவு (பதவியுடன் சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப அறிவு பற்றிய வினாக்கள் உள்ளடக்கப் பட்டிருக்கும்.)

(2) ஒவ்வொரு வினாத்தாள்களுக்கும் சமமான புள்ளிகள் வழங்கப் படும். பரீட்சையில் பரீட்சார்த்திகளினால் பெறப்படும் மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

4. **ஆட்சேர்ப்புத் தரம்**.- அளவை உபகரண தொழில்நுட்பவிய லாளர் தரம் III

5. **நியமன விதிகள்**.- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையது மாகும். விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியம்/ தபுதாரர் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு செய்ய வேண்டும். நியமனம் மூன்றாண்டு கால தகுதிகாண் நிலைக்கு உள்ளாக்கப்படும். தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள் தலைமை அலுவலகத்தில் சேவையாற்றுவதற்குத் தயாராக இருக்க வேண்டும். இந்த வர்த்தமானப் பத்திரிகையின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவையின் பதவி நியமனங்களுக்கு ஏற்புடையதான பொது நிபந்தனைகளுக்கு அமைவாக நியமனங்கள் மேற்கொள்ளப்படும்.

6. **சம்பள அளவுத்திட்டம்** :.

அளவை உபகரண தொழில்நுட்பவியலாளர் தரம் III :
மாதாந்தம் ரூபா 14,425 – 10 x 145 – 11 x 170 – 6 x 240 – 14 x 320 – ரூபா 23,665. (MT 1-2006-ஏ)

அளவை உபகரண தொழில்நுட்பவியலாளர் தரம் II :
மாதாந்தம் ரூபா 14,425 – 10 x 145 – 11 x 170 – 6 x 240 – 14 x 320 – ரூபா 23,665. சம்பளப் படிநிலை 12 இல் இருந்து ஆரம்பிக்கப்படும் (MT 1-2006-ஏ).

அளவை உபகரண தொழில்நுட்பவியலாளர் தரம் I :
மாதாந்தம் ரூபா 14,425 – 10 x 145 – 11 x 170 – 6 x 240 – 14 x 320 – ரூபா 23,665. சம்பளப் படிநிலை 23 இல் இருந்து ஆரம்பிக்கப்படும் (MT 1-2006-ஏ).

அளவை உபகரண தொழில்நுட்பவியலாளர் தெரிவுத் தரம் :
மாதாந்தம் ரூபா 20,030 – 11 x 365 – 18 x 500 – ரூபா 33,045. (MN 7-2006-ஏ).

7. **வயது எல்லை**.- விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18 வருடங்களுக்கு குறையாமலும், 45 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (இந்த ஆகக்கூடிய வயது எல்லை தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் பரீட்சார்த்திகளுக்கு ஏற்புடையதாகாது.)

8. **கல்வித் தகைமைகள்**.- (அ) போட்டிப் பரீட்சை மூலம் தெரிவுசெய்யப்படும் 90 வீதமான நியமனங்களுக்காக க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாது 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (ஒரு தடவையில் 5 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.) சிங்களம்/தமிழ், கணிதம்/எண்கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் மொத்தம் 6 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

அத்துடன்

க. பொ. த. (உ. த.) பரீட்சையில் தூயகணிதம், பிரயோக கணிதம் மற்றும் பௌதீகவியல் ஆகிய பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்

அத்துடன்

அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றில் ஒரு வருட இலத்திரனியல் அல்லது எந்திரவியல் பயிற்சிநெறி ஒன்றினை திருப்திகரமாகப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

9. **ஆட்சேர்ப்பு முறை**.- எழுத்துப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளப் பட்ட புள்ளிகளின் அடிப்படையில் தகைமைபெறும் பரீட்சார்த்தி களிடமிருந்து பொது நிருவாகச் சுற்றறிக்கை இல. 15/ 90 மற்றும் சம்பந்தப்பட்ட சுற்றறிக்கைகளின் நியதிகளுக்கமைய தெரிவு மேற்கொள்ளப்படும்.

10. சகல பரீட்சார்த்திகளும் பதவிக்காக வேண்டப்பட்ட சகல தகைமைகளையும், பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

11. **விண்ணப்பமும் ஏனைய விபரங்களும்**.- (அ) (i) இந்த அறிவித்தலின் முடிவில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய 21 x 29 செ. மீ. (ஏ4) அளவுத்தாளில் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை அவர்களே தயாரித்தல் வேண்டும்.

இலக்கம் 01-09 வரையான கூடுகள் முதலாவது பக்கத்திலும், இலக்கம் 10-12 வரையான கூடுகள் இரண்டாவது பக்கத்திலும், இலக்கம் 13, 14, 15 ஆம் கூடுகள் மூன்றாவது பக்கத்திலுமாக விண்ணப்பம் அமைதல் வேண்டும். பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு விண்ணப்பத்தில் அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் ஒட்டப்பட வேண்டும். விண்ணப்பத்தைக் கொண்டுள்ள கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''அளவை உபகரண தொழில்நுட்பவிய லாளர்'' பதவி என தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

முறையாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2010.11.29 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்பு ''நிலஅளவையாளர் நாயகம், நிலஅளவைத் திணைக்களம், கிருல வீதி, நாராஹேன்பிட்டி, கொழும்பு 05'' எனும் முகவரிக்கு அடையக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். (விண்ணப்பங்கள் தனிப்பட்ட நபர்களின் பெயர்களுக்கோ அல்லது வேறு ஏதேனும் முகவரிக்கோ அனுப்பி வைத்தலாகாது.)

(ii) சரியாகப் பூர்த்திசெய்யப்படாத, வேண்டப்பட்ட தகைமைகளைக் கொண்டிராத விண்ணப்பங்கள் மற்றும் முடிவுத் திகதியின் பின் பெறப்படும் விண்ணப்பங்கள் யாவும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

(iii) அஞ்சலின்போது தொலைந்துபோகும் விண்ணப்பங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட மாட்டாது.

(iv) பரீட்சைக் கட்டணம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மீளளிப்புச் செய்யப்பட மாட்டாது.

(v) விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றது என அறிவிக்கப்பட மாட்டாது.

(ஆ) பரீட்சார்த்தியின் ஆளடையாளம், அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, தரைப்படை அல்லது விமானப் படையின் கட்டளையிடும் அதிகாரி, பொலிஸ் சேவையில் அரசாங்க வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட ஒரு பதவியைக் கொண்டுள்ள ஒரு பொலிஸ் உத்தியோகத்தர், பொ. நி. சுற்றறிக்கை இல. 06/2006 இல் உள்ளவாறு ஊழியர்களின் தரப்படுத்தல் வரிசைக்கமைய மூன்றாம் தர அல்லது சிரேஷ்ட தரத்திலுள்ள நிரந்தர அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர் ஆகியோரில் எவரேனும் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

12. பரீட்சார்த்திகள் வேண்டப்படும்போது பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் :-

(i) பிறப்புச் சான்றிதழ் ;
(ii) கல்விச் சான்றிதழ் ;
(iii) அண்மையில் பெறப்பட்ட கிராம அலுவலரின் சான்றிதழ் ;
(iv) இரண்டு நற்சான்றுப் பத்திரங்கள் ;

**குறிப்பு**.- ஆவணங்கள் அல்லது அதனுடைய பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படக்கூடாது.

13. தற்போது அரசாங்க சேவையில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை தமது திணைக்களங்களின் தலைவர்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

14. பரீட்சைக் கட்டணம் ரூபா 200 ஆகும். ஒரு பரீட்சார்த்தி இத்தொகையை ஏதேனும் ஒரு மாவட்ட நிலஅளவை அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் குறிக்கப்பட்ட இடத்தில் ஒட்டுதல் வேண்டும். காசுக்கட்டளை அல்லது காசோலை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

15. தலைமை அலுவலகத்தில் அல்லது வேறு ஏதேனும் பொருத்தமான நிலையத்தில் பரீட்சை நடத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். பரீட்சை நடத்தப்படும் திகதி பரீட்சார்த்திகளுக்கு பின்னர் அறிவிக்கப்படும்.

16. **பரீட்சைக்கான அனுமதி**.- விண்ணப்பங்களை அனுப்பிய, குறிக்கப்பட்ட பதவிக்காக வேண்டப்பட்ட அடிப்படைத் தகைமைகளைக் கொண்டுள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் அவர்களின் விண்ணப்பங்களில் கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சை நிலையத்தில் மேற்பார்வையாளரிடம் தமது அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி அளிக்கப்பட மாட்டாது. அத்துடன் பரீட்சார்த்திகள் அவர்களுக்கு குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை மண்டபங்களில் மட்டும் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

**குறிப்பு**.- பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்குவதை அவர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான சகல தகைமைகளையும் கொண்டுள்ளார் என்றோ அல்லது இப்பதவிக்குத் தேவையான சகல தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ளார் என்றோ கருதலாகாது.

17. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இந்நோக்கத்திற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதாவதொன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(ஆ) தபால் மா அதிபரினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(இ) செல்லுபடியான கடவுச்சீட்டு.

18. **பிழையான தகவல்களை வழங்குவதற்கான தண்டனை**.- பரீட்சார்த்தி ஒருவர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமையற்றவர் எனக் கண்டுபிடிக்கப்பட்டால், அவருடைய பரீட்சார்த்தி உரிமை பரீட்சைக்கு முன்போ அல்லது பரீட்சை நடைபெறும்போதோ அல்லது பரீட்சைக்குப் பின்போ அல்லது அதன் பின்பு எந்நேரத்திலும் இரத்துச் செய்யப்படலாம்.

அவ்வாறே சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட பின்பும், ஒரு பரீட்சார்த்தி அவரது அறிவுக்கெட்டியவரையில் ஏதேனும் பிழையான தகவல்களை வழங்கியிருந்தார் என்றோ அல்லது ஏதேனும் முக்கியமான தகவல்களை வேண்டுமென்றே மறைத்திருந்தார் என்றோ கண்டுபிடிக்கப்பட்டால் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

19. **மொழி மூலம்**.- இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடத்தப்படும். இம்மொழி மூலங்களில் ஏதேனும் ஒரு மொழிமூலத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான உரிமையை பரீட்சார்த்தி கொண்டுள்ளார். பரீட்சார்த்தியினால் விண்ணப்பத்தில் பரீட்சை எழுதுவதற்கென குறிப்பிடப்பட்டுள்ள மொழிமூலம் பின்னர் மாற்றுவதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது.

20. மேற்கூறிய நிபந்தனைகளில் உள்ளடங்காத ஏதேனும் விடயங்கள் நிலஅளவையாளர் நாயகத்தின் தற்றுணிபின் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

எஸ். எம். டபிள்யூ. பெர்னாந்து,
நிலஅளவையாளர் நாயகம்.

நிலஅளவைத் திணைக்களம்,
கொழும்பு 5,
2010.10.12.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நிலஅளவைத் திணைக்களத்தில் நிலஅளவை உபகரண தொழில்நுட்பவியலாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பது தொடர்பான பகிரங்கப் போட்டிப் பரீட்சை**

(அலுவலகப் பாவனைக்கு மாத்திரம்.)

1. (I) முதலெழுத்துக்களுடன் பெயர் :-
(i) தமிழில்/சிங்களத்தில் :-----.
(ii) ஆங்கிலத்தில் :-----.

(II) முதலெழுத்துக்களைக் குறிக்கும் பெயர்கள் (தெளிவான எழுத்துக்களில்) :-
(i) தமிழில்/சிங்களத்தில் :-----.
(ii) ஆங்கிலத்தில் :-----.

2. (I) நிரந்தர முகவரி : (தெளிவான எழுத்துக்களில்) :-----.
(II) முகவரியுள்ள நிர்வாக மாவட்டம் :-----.

3. பால் :- ☐
(ஆண் - M, பெண் - F)
(உரிய 'அட்சரத்தினை' கூட்டில் குறியிடவும்)

4. பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :- ☐
(சிங்களம் - S, தமிழ் - T, ஆங்கிலம் - E)
(உரிய 'அட்சரத்தினை' கூட்டில் குறியிடவும்)

5. இனம் :- ☐
(சிங்களவர் - 1, இலங்கைத் தமிழர் - 2, முஸ்லிம் - 3, இந்தியத் தமிழர் - 4, பறங்கியர் - 5, மலாய் - 6, ஏனையவர்கள் - 7)

6. பிரதேச செயலகப் பிரிவு :----.
(i) பிரதேச செயலகப் பிரிவு :-----.
(ii) கிராம அலுவலர் பிரிவு :-----.
(iii) இந்த மாவட்டத்தில் நீர் எந்தத் திகதியிலிருந்து வசிக்கிறீர் : ----.

7. குடியுரிமை :-

வம்சாவழியாக : ☐

பதிவுமூலம் : ☐
(பொருத்தமான கூட்டில் '✓' அடையாளமிடவும்)

8. தேசிய அடையாள அட்டை இல. :-----.

9. (i) பிறந்த திகதி :-
ஆண்டு :-----. மாதம் :-----. திகதி :-----.

(ii) விண்ணப்பம் முடிவுத் திகதியன்று வயது :-
வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

10. கல்வித் தகைமைகள் :-

(i) க. பொ. த. (சா. த.) பரீட்சை :-
முதலாவது அமர்வு :-
(1) பரீட்சையின் ஆண்டும் மாதமும் :-----.
(2) சுட்டெண் :-----.
(3) சித்தியெய்திய பாடங்கள் :-

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |

(ii) க. பொ. த. (சா. த.) பரீட்சை :-
இரண்டாவது அமர்வு :--
(1) பரீட்சையின் ஆண்டும் மாதமும் :-----.
(2) சுட்டெண் :-----.
(3) சித்தியெய்திய பாடங்கள் :-

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |

(iii) க. பொ. த. (உ. த.) பரீட்சை விபரங்கள் :-
(1) பரீட்சையின் ஆண்டும் மாதமும் :-----.
(2) சுட்டெண் :-----.
(3) பரீட்சை நிலையம் :-----.

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

11. ஏனைய தகைமைகள் :-----.

12. ஏதேனும் குற்றச்செயல்களுக்காக நீதிமன்றத்தால் குற்றவாளியாகத் தண்டிக்கப்பட்டுள்ளீரா ? :-

ஆம் ☐ இல்லை ☐

ஆம் எனின் விபரம் தருக :-----.

13. கட்டணம் செலுத்தப்பட்ட நிலஅளவை அலுவலகம் :-
பற்றுச்சீட்டு இல. :-----.
கட்டணம் செலுத்திய திகதி :-----.

(பற்றுச்சீட்டு மூன்றாம் பக்கத்தில் ஒட்டப்பட வேண்டும்)

14. **பரீட்சார்த்தியின் உறுதிமொழி :**

(அ) இந்த விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்ட விபரங்கள் நான் அறிந்தவரை உண்மையானவையும், சரியானவையும் என்று இத்தால் உறுதிமொழிகின்றேன்.

(ஆ) இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்ட விபரங்கள் எவையேனும் தவறானவை என்று தெரிவுசெய்யப்படுவதற்கு முன் கண்டுபிடிக்கப்பட்டால் தகைமை நீக்கத்திற்கும், நியமனத்திற்குப்பின் கண்டுபிடிக்கப்பட்டால் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

(இ) இப்பரீட்சை விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் கட்டுப்பட்டு நடக்க இணங்குகின்றேன்.

(ஈ) பரீட்சைக் கட்டணமாக 200 ரூபா செலுத்திப்பெற்ற பற்றுச்சீட்டு குறிக்கப்பட்ட இடத்தில் ஒட்டப்பட்டுள்ளது.

------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

*17.* **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ..................................................................................... (பெயர்) எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும், அவர்/அவள் தனது கையொப்பத்தை எனது முன்னிலையில் இட்டார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

------,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
திகதி :-----.

(பணப்பற்றுச்சீட்டை இங்கே ஒட்டவும்.)

*16.* **திணைக்களத் தலைவரின் சிபாரிசு :-**

இந்த உத்தியோகத்தர் இந்தப் பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் அவரை தற்போதைய சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/விடுவிக்க முடியாது.

-----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி :-----.

10-917

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.